**THE TAMIL NADU DR.AMBEDKAR LAW UNIVERSITY**

State University Established by Act No.43 of 1997

M.G.R. Salai, Near Taramani Railway Station, Perungudi, Chennai – 600 113

Telephone No. 044-2243 9051



**Dr. R. SRINIVASAN, M.L., Ph.D.,**
**Controller of Examinations**

Dt.17.07.2021

## PRESS RELEASE

## ONLINE EXAMINATIONS, JULY 2021

## CLARIFICATIONS TO STUDENTS

In view of the prevailing Covid - 19 situation, the Tamil Nadu Dr.Ambedkar Law University has scheduled its Semester Examinations, 2020 - 2021 for the students of its affiliated law colleges and the School of Excellence in Law through Online mode from 19th July, 2021.In this regard, candidates have enquired through letters / email / social media to clarify some of their doubts in writing the Examinations through Online mode and thereby the following clarifications are given.

1. Candidates are hereby clarified that the internet connectivity is required only at the following phases:
    a. At the time of downloading the Mobile eXamcentre App and its registration process.
    b. At the time of logging into the Mobile eXamcentre App, downloading of Question paper and uploading of answer scripts.
    c. This eXamcentre mobile App does not require internet connectivity in the rest of the time.
2. In order to avoid impersonation during the Examination, this app will enable the camera in the following phases:
    a. At the time of registration process and logging into the Mobile eXamcentre App.
    b. At the time of answering the random verification questions, the camera will be switched on for a minute or so.
    c. The eXamcentre mobile App will not switch on the camera rest of the time and the video will not be recorded.
3. Only 2 or 3 simple verification questions will be asked during the examination and these questions will not be related to the subject / course.
   For example:
    1. Name / Date of Birth / Mobile No. as registered in the University records.
    2. Your favourite sport / city / food.
4. As mentioned in the "Guidelines to students" candidates are advised and instructed to write all their examinations at the place of registration / at a single location like any other conventional mode of examination.
5. Candidates applied for the examination, and intended to write an examination of a Not-Registered paper, candidate is still permitted to write that examination on his own risk and willingness. Candidate can login into eXamcentre App on the exam day of Not-registered paper and can choose from the list of papers being conducted on that particular day for his/her course.
6. Candidates are instructed that after completion of all their examinations, shall post the hardcopy of all the answer scripts in a thick cover mentioning their Register No. and Name on the postal cover without fail.
7. It is hereby informed that the Candidates who couldn't attend the Mock test on 17th July 2021, an another Mock test is also being conducted on 18th July 2021 from 9.00 a.m. to 12.00 noon, for all the U.G. Degree Courses.
8. With regard to the press release dated 16-07-2021, it is hereby clarified that a candidate is permitted to appear all the examinations either in online or offline mode only. The Off-line examination will be scheduled by the University once normalcy returns.

17/07/2021

**CONTROLLER OF EXAMINATIONS**

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்
"பூம்பொழில்", 5, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை-600 028.
தொலைபேசி: 2464 1212, 2464 1919. தொலைநகலி: 2461 7996

முனைவர். இரா. ஸ்ரீனிவாசன்
தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்

தேதி.17.07.2021

செய்தி வெளியீடு

**இணையவழித் தேர்வுகள், ஜூலை 2021**
மாணவர்களுக்கான தெளிவுரைகள்

தற்பொழுது நடைமுறையில் உள்ள கோவிட் - 2019 நிலையைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் கீழ் இயங்கும் சீர்மிகு சட்டப் பள்ளி மற்றும் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற அனைத்து சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கான 2020-2021-ம் ஆண்டிற்கான பருவத் தேர்வுகளை ஜூலை 19, 2021 முதல் இணையவழி வாயிலாக நடத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இத்தேர்வுகள் தொடர்பாக, மாணவர்கள் கடிதங்கள்/மின்னஞ்சல்/சமூக ஊடகங்கள் வாயிலாகவும் தங்களது சந்தேகங்களை எழுப்பியுள்ளதன் அடிப்படையில், பல்கலைக்கழகம் பின்வரும் தெளிவுரையை வழங்குகிறது:

1. தேர்வுகள் எழுதும் மாணவர்களுக்கு கீழ்க்கண்ட கட்டங்களில் மட்டுமே இணைய சேவை வசதி தேவைப்படும் என தெளிபடுத்தப்படுகிறது:

   அ) கைபேசி eXamcentre செயலியை பதிவிறக்கம் செய்து பதிவு செய்யும் பொழுதும்;
   ஆ) கைபேசி eXamcentre செயலியில் உள்நுழைதல் நடைமுறையின் போதும், கேள்வித்தாள்களைப் பதிவிறக்கம் செய்தல் மற்றும் விடைத்தாள்களை பதிவேற்றம் செய்யும் பொழுதும்;
   இ) மற்ற நேரங்களில் கைபேசி eXamcentre செயலி இயக்க இணைய சேவை வசதி தேவையில்லை.

2. தேர்வின்போது ஆள்மாறாட்டம் செய்வதைத் தவிர்க்கவே, இந்த பயன்பாடானது ஒளிப்பட பயன்பாட்டை கீழ்க்கண்ட கட்டங்களில் இயக்கும்:

   அ) கைபேசி eXamcentre செயலியை பதிவு செய்யும் பொழுது மற்றும் பயன்பாட்டில் உள்நுழையும் நடைமுறையின் பொழுதும்;
   ஆ) தேர்வுக்கு நடுவே சரிபார்க்கும் வகையில் பதிலளிக்க கேட்கப்படும் தோராய கேள்விகள் தோன்றும் போது சுமார் ஒரு நிமிடம் ஒளிப்பட பயன்பாடு இயங்கும்;
   இ) மற்ற நேரங்களில் eXamcentre கைபேசி செயலி ஒளிப்படம் எடுக்கவோ, ஒளிப்பதிவு செய்யவோ இயங்காது.

3. தேர்வின் போது 2 அல்லது 3 எளிய சரிபார்ப்பு வினாக்கள் கேட்கப்படும். மேலும், அந்த வினாக்கள் பாடத்திட்டத்திலிருந்தோ பாடப்பிரிவிலிருந்தோ கேட்கப்பட மாட்டாது.

   எ.கா.:
   (அ) பல்கலைக்கழக பதிவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பெயர்/பிறந்த தேதி/மொபைல் எண். தொடர்புடைய வினாக்கள்.
   (ஆ) விருப்பமான விளையாட்டு / நகரம் / உணவு தொடர்புடைய வினாக்கள்.

4. "மாணவர்களுக்கான வழிகாட்டுதல் நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மாணவர்கள் தாங்கள் கைபேசி செயலியை பதிவு செய்த இடத்திலிருந்தோ அல்லது ஒரே இடத்திலிருந்தோ தேர்வை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

5. தேர்வுக்கு விண்ணப்பித்த மாணவர்கள், பதிவு செய்ய தவறிய / மறந்து விடுபட்ட பாடப்பிரிவுக்கும் சேர்த்து தேர்வு எழுத விரும்பினால், தங்களின் சொந்த விருப்பத்தின் பேரிலும், தாமாகவே முன்வந்தும் "பதிவு செய்யப்படாத" பாடப் பிரிவுக்கும் தேர்வை மேற்க்கொள்ளலாம். அவ்வாறாக தேர்வு எழுத விரும்பும் மாணவர்கள் eXamcentre செயலியில் குறிப்பிட்ட தேர்வு நாளன்று "பதிவு செய்யப்படாத" என்ற பிரிவின் கீழ் உள்நுழைந்து அன்றைய தேதியில் நடத்தப்படும் தேர்வுகளுக்கான பாடப்பிரிவில் தங்களது பாடத்தை தேர்வு செய்து எழுதலாம்.

6. அனைத்து தேர்வுகளையும் முடித்த பின்னர், மாணவர்கள் தங்களது அசல் விடைத்தாள்களை கனமான தபால் உறையினுள் இட்டு, தபால் உறையின் மேல் தங்களது பெயர் மற்றும் பதிவு எண்ணை தவறாமல் குறிப்பிட்டு **தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர். சாலை, பெருங்குடி, சென்னை – 600 113** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

7. ஜூலை 17, 2021 அன்று நடந்த மாதிரி தேர்வில் (Mock Test) கலந்து கொள்ளத் தவறிய மாணவர்கள் மீண்டும் ஜூலை 18, 2021 அன்று காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை நடத்தப்படும் மற்றொரு மாதிரி தேர்வில் (Mock Test) கலந்து கொள்ளலாம். இத்தேர்வுகள் அனைத்து இளநிலை பாடப்பிரிவு மாணவர்களுக்கும் பொருந்தும்.

8. 16.07.2021 அன்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு, மாணவர்கள் தங்களின் அனைத்துத் தேர்வுகளையும் இணையவழி வாயிலாகவோ அல்லது நேர்முக தேர்வு வாயிலாகவோ, ஏதேனும் ஒரு முறையில் மட்டுமே தேர்வு எழுத முடியும் என தெளிவுபடுத்தப்படுகிறது. இயல்புநிலை திரும்பியதும் நேர்முகத் தேர்வு நடத்த பல்கலைக்கழகத்தால் திட்டமிடப்படும்.

17/07/2021
தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்